**தலைப்பு 206 – கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 206 – கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச்

சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை | 1. | செயல்நடவடிக்கை திட்டததினை தயாரிப்பதிலான குறைபாடுகள் | 2.1.1 |
| | | 2. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.11 |
| | | 3. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | | | |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | | பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள். | 2.2.1 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | 1. | அரசாங்க உத்தியோகதர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.8(அ)(ஆ)(இ) |
| | | 2. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.3(அ)(ஆ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை காலதாமதத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றமை. | 2.1.2 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்ற தெனவும் | நிலுவைக் கடன் மீதிகள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.5 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத்தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவும், | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.7(அ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 11 ஏனைய நிறுவனங்களின் உத்தேச அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் பின்வரும் தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி.

(ஆ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைக்கான திட்டம் (Imprest Requirement Plan)

### 2.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2018 யூன் 03 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் அடையப்பெற்றிராமை

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதாக உள்ளதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடய பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏதெனுமொரு செயற்பாட்டின் சரியான செயலாற்றலினை அளவிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்று நிலவுதல் அவசியமான போதிலும், திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதனை அளவிடுவதற்கான சரியானதொரு அடிப்படையை உருவாக்க தவறியிருந்தது.

### 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

திணைக்களத்தினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமைய செயற்பட்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 271.08 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 169.87 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.1 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜோன் த சில்வா ஞாபகார்த்த அரங்கம் மற்றும் தேசிய காலபவன கட்டிட வளாகத்தினை நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக 365 நாட்களில் பணிகளை நிறைவு செய்வதற்கு 2014 நவம்பர் 14 ஆந் திகதி ரூபா 386.5 மில்லியனுக்கு ஒப்பந்ததாரர் மற்றும் திணைக்களத்திற்கிடையே உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 415.98 மில்லியன் செலுத்தப்பட்டிருந்து. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சரவையினால் தெரிவு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஐந்து ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைக்கேள்வி கோரப்பட்டு வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அந்த வழங்குநருக்கு ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதமான சேவைக்கட்டணத்தை குறைத்து செலுத்துவதன் அடிப்படையில் விலைக்கேள்விகளை கையளிப்பதற்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி ஒப்பந்ததாரருக்கு செலுத்திய பணமான ரூபா 368.3 மில்லியன் தொகையில் 10 சதவீத சேவை

வழங்கல் கட்டணமான ரூபா 36.8 மில்லியன் தொகையை குறைக்காது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கமைய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மதியுரை சேவைகளை வழங்கும் மொரட்டுவை பல்கலைக்கழகம் ஆகியவற்றால் அமைச்சரவையின் தீர்மானங்களை கருத்திற் கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) ‘‘ஹெல கீ மக’’ மற்றும் ‘‘அபிநய’’ போன்ற பழமையான 13 நூல்களின் 1000 பிரதிகள் வீதம் ரூபா 2,128,410 தொகை செலவிடப்பட்டு அரசாங்க மற்றும் தனியார் அச்சீட்டு நிறுவனங்களின் மூலம் அச்சிடலுடன் தொடர்புடையதாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அச்சிடப்பட்ட 05 நூல்களில் சில சொற்கள் அச்சிடப்பட்டிராமை, மை போதாமை, புகைப்படங்களை இனங்காணுவதிலான சிரமங்கள் போன்ற அச்சீட்டு குறைபாடுகள் உள்ள போது களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டு, அதற்காக ரூபா 783,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.7.1 வழிகாட்டிக்கமைய வழங்குநருக்கு விலைக்கேள்வியை கையளிப்பதற்கு முன்னர் செலவினங்களை மீள்நிரப்புவதற்காக நிதியேற்பாடு காணப்படுகின்றது என பெறுகை நிறுவனம் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது நிதியேற்பாடு போதாமையின் காரணமாக 05 கலை சார்ந்த நூல்களுக்கான அச்சீட்டுக் கட்டணமான ரூபா 796,410 தொகை 2017 ஆம் ஆண்டின் போது இரு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்தது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சொத்துக்களை பதிவேட்டிற்குட்படுத்தல்**

ரூபா 7,235,638 தொகையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களும், ரூபா 8,800,000 தொகையான இயந்திரம் மற்றும் உபகரணங்களும், ரூபா 140,730,165 தொகையான கட்டிடம் மற்றும் நிர்மாணங்களுமாக ரூபா 156,765,803 கூட்டுப் பெறுமதியுடைய சொத்துக்கள் மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்**

2018 சனவரி 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது 2016 ஆம் ஆண்டின் போது களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெற்ற ‘‘ஹெல கீ மக’’, ‘‘அபிநய’’ 1,2,3,4,6 வலயம் மற்றும் ‘‘சித்ரபட்டிய’’ புத்தகங்கள் 54 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரையிலும், அபிநய 5,7,8 மற்றும் 10 இருப்பானது 80 சதவீதத்திற்கும் அதிகமான வீச்சுடைய ரூபா 1,572,305 பெறுமதியான 9668 பழமையான நூல்கள் 2018 சனவரி 04 ஆந் திகதியளவில்

சுமார் ஒரு வருட காலமாக விற்பனை செய்வதற்கு அல்லது வாசிகசாலைகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காது களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது.

## 2.4 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

பொறுப்புகள் பதிவேடு, ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புகள் தொடர்பான கூற்றுடன் இணக்கம் செய்யும் போது 206-01-01-1409 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் பொறுப்புகள் ரூபா 34,000,000 இனால் ஒதுக்கீட்டுக் கணக்கில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 அரச நாடக விழாவிற்காக அபிநய 11 வலயத்தில் 1000 பிரதிகள் ரூபா 210,000 செலவிடப்பட்டு அரசாங்க அச்சீட்டு திணைக்களத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அதன் அச்சீட்டு நடவடிக்கைகள் 2017 பெப்ரவரி 24 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2017 மே 09 ஆந் திகதி வரையிலுமான தாமதத்தின் பின்னர் 690 நூல்கள் மாத்திரம் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. எஞ்சிய 310 பிரதிகள் திணைக்களத்திற்கு கிடைத்தமையை உறுதி செய்யும் பொருள் பெறுவனவு பத்திரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

## 2.6 முகாமைத்துவ குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான கடுவாவலயில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் திணைக்களத்தின் புத்தக களஞ்சியம் அமைந்திருந்தது. கூரை உட்புறமாக மூடப்பட்டிராமையால் சிறு பூச்சிகளால் புத்தகங்களுக்கு பாதிப்பு ஏற்படுதல், கட்டிடத்திற்கு சிவிலின் இல்லாதிருந்தமை காரணமாக அதிக வெப்பம் காரணமாக அச்சிடப்பட்ட புத்தகங்களின் பக்கங்கள் சுருங்கி பயன்படுத்த முடியாதவாறு அழிவடைந்துள்ளமை, புத்தகங்களை களஞ்சியப்படுத்துவதற்கு போதியளவான இறாக்கைகள் இல்லாதிருந்தமை காரணமாக பூச்சிகளினால் புத்தகங்களுக்கு சேதம் ஏற்படல், அவசர தீ போன்றதொரு சந்தர்ப்பத்தில் புத்தகங்களின் பாதுகாப்பிற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிராமை, வசதிகளுடனான மலசலகூடம் மற்றும் அலுவலக ஊழியர் வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தாமை போன்ற பல்வேறு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. இந்த கட்டிடமானது திணைக்களத்தின் புத்தகங்களின் பாதுகாப்பு மற்றும் விநியோகிக்கப்படும் வரையிலும் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பொருத்தமானதொரு இடம் அல்ல என்பதும், புத்தகங்களின் பாதுகாப்பு தொடர்பில் அச்சுறுத்தலொன்று நிலவுவதாகவும் வெளிப்படுத்தப்பட்டது. இந்த கட்டிடமானது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானதாக உள்ளமையால் அதனை பழுதுபார்க்கும் இயலுமை இல்லாதிருந்ததுடன, பொருத்தமான களஞ்சிய வசதிகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் உரிய

நடவடிக்கை எடுக்காமை முகாமைத்துவத்தின் நலிவொன்றாக அவதானிக்கப்பட்டது.

## 2.7 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 324.44 | 300.11 | 24.33 | 7.49 |
| | மூலதனம் | 152.30 | 41.19 | 111.11 | 72.95 |
| | **மொத்தம்** | **476.74** | **341.30** | **135.44** | **28.40** |
| **2014** | மீண்டுவருபவை | 404.80 | 389.39 | 15.41 | 3.80 |
| | மூலதனம் | 186.55 | 139.03 | 47.52 | 25.47 |
| | **மொத்தம்** | **591.35** | **528.42** | **62.93** | **10.64** |
| **2015** | மீண்டுவருபவை | 500.36 | 495.53 | 4.83 | 0.97 |
| | மூலதனம் | 296.74 | 256.98 | 39.76 | 13.40 |
| | **மொத்தம்** | **797.10** | **752.51** | **44.59** | **5.59** |
| **2016** | மீண்டுவருபவை | 522.19 | 512.29 | 9.90 | 1.90 |
| | மூலதனம் | 334.95 | 238.68 | 96.27 | 28.74 |
| | **மொத்தம்** | **857.14** | **750.97** | **106.17** | **12.39** |
| **2017** | மீண்டுவருபவை | 598.07 | 586.11 | 11.96 | 1.99 |
| | மூலதனம் | 275.86 | 173.07 | 102.79 | 37.26 |
| | **மொத்தம்** | **873.93** | **759.18** | **114.75** | **13.13** |

மீளாய்வாண்டிற்குரியதாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

08 மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 185.28 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 82.52 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த செலவின விடயங்களுக்கு உரிய தேறிய

நிதியேற்பாட்டில் 26 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

**2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 27.00 | 21.41 | 13.00 | 18.38 | 70.00 | 61.19 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர்ந்த ரூபா 766,334 ஆக இருந்ததுடன், இந்த நிலுவை மீதிகள் 01 முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கால வீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கின் வரவு மீதி மற்றும் திறைசேரி கணனி அச்சீடுகளின் பிரகாரம் வரவு மீதிக்கிடையிலான ரூபா 444,761 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து நிலவிவரும் இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அதனை தீர்ப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்களத்தின் முற்பணக் கட்டுப்பாட்டு கணக்கின் ஆண்டு இறுதியிலான வரவு மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 220,990 ஆன இணக்கம் செய்யப்படாத மீதியொன்று நிலவியது. அவற்றுள் ரூபா 211,738 தொகைக்காக மாத்திரம் காரணங்கள் விளக்கமளிக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த வேறுபாட்டினை சீராக்கம் செய்த்தன் பின்னர் மேலும், ரூபா 9,252 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

**2.9 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழான 04 வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 51.67 மில்லியன் ஆகும். அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 6,463,476 கூட்டுத்தொகையான 62 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 565 (5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காகவும் பொது 71 மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்படும் மாதாந்த வைப்புக்களின் பொழிப்பு அதற்கடுத்த மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் 04 வைப்புக் கணக்குகளுக்குரிய மாதாந்த வைப்பு பொழிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.10 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தில் 2017 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வங்கிக் கணக்கிற்குரியதாக முன்வைக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றுகளை பரீட்சிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வழங்கப்பட்ட போதிலும் 06 மாதங்களுக்குள் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படடாதிருந்த ரூபா 3,364,459 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வங்கி இணக்கக்கூற்றுகளின் பிரகாரம், வங்கியால் நேரடி கொடுப்பனவுகளாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 0.02 மில்லியன் கூட்டுத்தொகையான 08 மீதிகள் தொடர்பில் அதன் சரியான தன்மை பற்றி அறிந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு 2018 யூலை மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வங்கி கணக்கிணக்க கூற்றுகளுக்கமைய வங்கிக்கு கிடைத்த நேரடி பெறுவனவுகள் ரூபா 0.05 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பெறுவனவுகள் இனங்காணப்பட்டு பொருத்தமான முறையில் கணக்கு வைப்பதற்கு 2018 யூலை மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைகள் பதிவேடு பேணப்பட்டிராததுடன், நிதிப்பிரமாணம் 237(ஆ) இன் பிரகாரம் பொருட்கள் பதிவேடு (புத்தக களஞ்சியம்) நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

உள்ளக கணக்காய்வாளர் பதவி 2011 யூலை 28 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் இந்த பதவி வெற்றிடமாக காணப்பட்டது. உள்ளக பணிகள் வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டினுள் 06 கணக்காய்வு ஐயவினாக்கள் வெளியிடப்பட்டிருந்தன.

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

### 2.13.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

திணைக்களத்தின் பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 310.91 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 441,629 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 26 | 14 | 12 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 624 | 549 | 75 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 155 | 114 | 41 |
| (v) | அமைய / ஒப்பந்தம் | 47 | 25 | 22 |
| | மொத்தம் | 856 | 704 | 152 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட மட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதி/உதவி பணிப்பாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் இல்லாத மத்திய கலாசார நிதியத்திற்குரிய வீடியோ புகைப்பட நிபுணர் உத்தியோகத்தர்கள் இருவர் 2016 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத ‘‘பயிற்சி ஆலோசகர்’’ எனும் பெயருடைய பதவியொன்றுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட நபர் ஒருவருக்கு ரூபா 490,378 கூட்டுத்தொகையான மாதாந்த படிகள் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 பெப்ரவரி மாதம் வரையிலும் செலுத்தப்பட்டிருந்தது.